**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.73/2023**

**PW11**

| | | |
|---|---|---|
| **Name** | : | மரு.R. நரேந்தர் |
| **Father's Name** | : | ராஜசேகர் |
| **Village** | : | |
| **Taluk/District** | : | தாம்பரம், சென்னை |
| **Caste** | : | -------- |
| **Calling** | : | |
| **Religion** | : | -------- |
| **Age** | : | |

Accused present.

Witness examined in accordance with High court of Madras video conferencing Rules 2020.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் நான் சென்னை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது கடந்த 05.10.2022 அன்று மதியம் 1.30 மணியளவில் சேத்துப்பட்டு காவல் நிலைய குற்ற எண். 461/2022 ல் தொடர்புடைய 74 வயது மதிக்கத்தக்க ஆண் ராஜகோபால் என்பவரின் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்ய வேண்டி காவல் ஆய்வாளரின் விண்ணப்பத்தை காவலர் எண். 2310 திரு. சத்தியராஜ் என்பவரிடம் பெற்று அங்கமச்ச அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டு மதியம் 1.40 மணியளவில் பிணக்கூராய்வு செய்ய தொடங்கினேன். மிதமான ஊட்டச்சத்து கொண்ட ஆண் பிரேதத்தின் மீது மரண விரைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது.

அவரை பரிசோதனை செய்தபோது கீழ்க்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. ஒழுங்கற்ற கரும்பழுப்பு பக்கு மூடிய சிராய்ப்பு காயங்கள்
   A. 7X2செ.மீ அளவில் வலது கை முட்டியின் பின்புறம் காணப்பட்டது.
   B. 4X0.5 செ.மீ, 1X0.5 செ.மீ அளவில் வலது பாதத்தின் முன்புறம் காணப்பட்டது.

C. 3X0.5 செ.மீ, 5X0.5 செ.மீ, 4X0.5 செ.மீ அளவில் இடது பாதத்தின் முன்புறம் காணப்பட்டது.

D. 1X0.5 செ.மீ, 2X1 செ.மீ , 0.5X0.5 செ.மீ அளவில் முதுகின் வலதுபக்கம் மேல் மூன்றாம் பகுதியில் காணப்பட்டது.

E. 7X 0.1 செ.மீ , 2X0.1 செ.மீ, 1X 0.1 செ.மீ அளவில் முதுகின் வலதுபக்கம் நடு மூன்றாம் பகுதியில் காணப்பட்டது.

2. தலையை கூராய்வு செய்ததில் கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம் 13X9 செ.மீX தோல் ஆழம் வரை வலது முன், நடு மற்றும் பக்கவாட்டு மண்டை ஓட்டு தோல் பகுதிகளில் காணப்பட்டது. கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம் 3X2 செ.மீX தோல் ஆழம் வரை இடது நடு மண்டை ஓட்டு தோல் பகுதிகளின் பின்புறத்தில் காணப்பட்டது. . கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம் 4X3.5 செ.மீX தோல் ஆழம் வரை இடது நடு மற்றும் பக்கவாட்டு மண்டை ஓட்டு தோல் பகுதிகளில் காணப்பட்டது. மண்டை ஓடு மற்றும் மூளை மேல் உள்ள சவ்வு நல்ல நிலையில் காணப்பட்ட்து. கருஞ்சிவப்பு நிறத்திலான ரத்தக்கட்டி 120 கிராம் அளவில் இடது பக்கவாட்டு , நடு மற்றும் பின் மூளை பகுதிகளில் சவ்வுக்கு கீழே காணப்பட்டது. கருஞ்சிவப்பு நிறத்திலான ரத்தக்கசிவு வலது மற்றும் இடது பெரு மற்றும் சிறு மூளை பகுதிகளை சுற்றி சவ்வுக்கு மேலும் கீழும் காணப்பட்டது. மூளை வீங்கி காணப்பட்டது. கூராய்வு செய்ததில் நல்ல நிலையில் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி நல்ல நிலையில் காணப்பப்பட்டது.

3. ஒழுங்கற்ற முழுமையற்ற எலும்பு முறிவு வலது கன்னத்தின் எலும்பு பகுதியில் காணப்பட்டது. அதனை சுற்றி ரத்தக்கசிவும் கன்றிய காயமும் காணப்பட்டது.

4. அறுவை சிகிச்சையால் ஏற்படுத்தப்பட்ட கிழித்த காயம் 1X0.5 செ.மீ X அரை ஆழம் அளவில் கழுத்து பகுதியின் முன்புறம் நடுவே கீழ் மூன்றாம் பகுதியில் காணப்பட்டது.

5. அறுவை சிகிச்சையால் ஏற்படுத்தப்பட்ட சிறிய குத்து காயம் 0.1X0.1 செ.மீ Xரத்த நாளம் ஆழம் அளவில் வலது புறம் கழுத்து பகுதியின் கீழ் மூன்றாம் பகுதியில் காணப்பட்டது.

6. அறுவை சிகிச்சையால் ஏற்படுத்தப்பட்ட சிறிய குத்து காயம் 0.1X0.1 செ.மீ Xரத்த நாளம் ஆழம் அளவில் இடது புறம் கழுத்து பகுதியின் கீழ் மூன்றாம் பகுதியில் காணப்பட்டது.

இதயம் சாதாரண அளவில் காணப்பட்டது. கூராய்வு செய்ததில் அனைத்து அறைகளிலும் ரத்தம் திரவமாகவும் கெட்டியாகவும் காணப்பட்டது. வால்வுகள் தடித்து காணப்பட்டது. இதயத்திற்கு செல்லும் ரத்தக்குழாய்கள் நல்ல நிலையில் காணப்பட்டது. பெருந்தமனிகளில் உட்புறம் நிறைய எழும்பிய கொழுப்பு படிவங்கள் காணப்பட்டது. நுரையீரல்கள் சாதாரண அளவில் காணப்பட்டது. கூராய்வு செய்ததில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் காலியாக காணப்பட்டது. நாவடி எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது. இரைப்பையில் 50 மி.லி அளவிலான பச்சை நிற திரவம் எவ்வித வாசனையும் இன்றி காணப்பட்டது. இரைப்பையின் உட்படலம் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் , சிறுநீரகங்கள் சாதாரண அளவில்

காணப்பட்டது. கூராய்வு செய்ததில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. சிறுநீர்பை காலியாக காணப்பட்டது. மார்பு எலும்புகள் , இடுப்பெலும்புகள் மற்றும் முதுகெலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டிருந்தது. ரத்தம் தோய்ந்த துணி குருதிவடிநீரியல் அறிக்கைக்காக எடுக்கப்பட்டது. இறப்பிற்கான காரணம் உள்ளுறுப்புகளின் பகுப்பாய்வு அறிக்கை பெற்ற பின் வழங்கவதற்காக அனுப்பி வைக்கப்பட்டது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றிதழ் **அ.த.சா.ஆ.7**. பின்னர் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து 13.10.2022 தேதியிட்ட நஞ்சியல் அறிக்கை பெறப்பட்டது. அதில் உடல் உள்ளுறுப்புகளில் மதுவோ அல்லது நச்சுப்பொருட்கள் எதுவும் இல்லை என்று சொல்லப்பட்டது. அந்த நஞ்சியல் அறிக்கை **அ.த.சா.ஆ.8**. 27.10.2022 அன்று மேற்படி நபர் தலையில் ஏற்பட்ட மழுங்கிய விசை காயங்களின் விளைவுகளால் இறப்பு நேரிட்டிருக்கும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.த.சா.ஆ.9**. 28.04.2023 அன்று நான் அனுப்பிய ரத்தம் தோய்ந்த துணியில் இருந்த ரத்தம் "B" வகையை சார்ந்தது என்று அறிக்கை பெறப்பட்டது. ஒரு நபரை பலமாக முகத்தில் குத்தி சுவற்றில் முட்டி இழுத்தால் நான் பிரேத பரிசோதனை சான்றிதழில் குறிப்பிட்டுள்ள 1 முதல் 3 வரை உள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

74 வயது மிக்க ஒரு நபர் படிகட்டில் ஏறும்போது 10 வது படிகட்டில் இருந்து குப்புற விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பில்லை. மேற்படி நபர் படியில் இருந்துதான் கீழே விழுந்து மேற்படி காயங்கள் ஏற்பட்டது என்றும் நான்போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

| | | |
|---|---|---|
| V. Varalakshmi | | S. Bharani |
| Bench clerk Gr.1 | R. Narendhar | Computer Operator |
| **Court site coordinator** | **Deponent** | **Remote site coordinator** |

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.